RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1328

# திணைக் கோட்பாட்டடிப்படையில் குறுந்தொகை குறிஞ்சித் திணைக் கவிதைகளின் கட்டமைப்பு

செ. ஷினி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்-695034, இந்தியா

# The Structure of the Kurunthokai Kurinchithinai Poems on the Basis of the Thinai Theory

**S. Shini [a, *]**

[a] Department of Tamil, University College, Thiruvananthapuram-695034, India

* Corresponding Author: shiniselvaraj81@gmail.com

Received: 10-06-2022
Revised: 10-09-2022
Accepted: 30-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

The form of poetry is the oldest of literary genres. This form of art, the poem, has many elements. Tolkappiyar's theory of Thinai explains these aspects. Tolkappiyar refers to the objects found in the poem in three categories, namely, the Muthal, the Karu, and the Uri. According to Tolkappiyar, all agam literature would be created into scenes using what is necessary for these materials. The agam literature of the Sangam has been developed with subtle methods of fiction. In agam literature, Thinai elements have been used for the creation of agam. It is noteworthy that all the internal songs of the Sangam are situated in this state. In the structure of Kurunthokai too, the three elements of the Muthal, the Karu, and the Uri have been used for poeticization. These elements are not always combined and poetically composed in all poems. In some of the poems, it is possible to recognize that these three elements are combined, and in some poems, the poems are constructed in conjunction with one or two elements. In compiling the Kurinji Thinai poems in the Kurunthokai, the land-based descriptions or references contained in those poems have supported the movement of the poem on many levels. In Kapilar's poems, Kurinji's land background is more fictional. Natural themes have been highlighted at various levels in the Kurinji poems. The essentiality of themes can be inferred in places where the subject matter, the underlying theme of the poem, is presented in detail.

**Keywords:** Tolkappiyar, Kurunthokai, Kurinchi Thinai, Poem Structure.

## முன்னுரை

சங்க அகக் கவிதைகளை ஆராய்ந்தால் ஒரு கவிதைக்குள் பல கூறுகள் இணைவதை அடையாளம் காண முடிகின்றது. அக்கூறுகளில் முதன்மையான முதற்பொருள் நிலத்தையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இயற்கையைப் பயன்படுத்திப் கவிதையைப் படைக்கும் மரபு அகப்பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகிறது. முதல், கரு ஆகிய இரண்டும் இயற்கையோடு இணைந்ததாகும். இவ்வியற்கைச் சார்பான கருப் பொருட்கள் கவிதையின் இயக்கத்துக்குப் பல நிலைகளில் துணைபுரிந்து கவிதையை உயிரோட்டமுள்ளதாக்குகின்றன. சங்க அக இலக்கியங்கள் உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. ஆயினும் முதல்,கரு என்னும் பின்புலக் கூறுகளும் கவிதை கட்டமைப்பிற்குப் பெரிதும் பயன்படுகின்றன. குறுந்தொகையில் உள்ள குறிஞ்சித்

திணைக் கவிதைகளின் கட்டமைப்பிற்கு முதல்,கரு,உரி ஆகிய இம்முப்பொருட்கள் எவ்வாறு பயன்பட்டுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## பொருட்கூறுகள்

தொல்காப்பியர் கவிதையைப் பல உறுப்புக்களையுடைய ஒரு முழுமையான வடிவமாகக் குறிப்பிடுகிறார். இவர் கவிதையின் இலக்கணத்தைப் பொருள் என்ற கூறை அடிப்படையாகக் கொண்டு ஏனையவற்றை உள்ளடக்கிக் காட்டுகிறார். இவர் கவிதைக்குரியப் பொருள்களை முதல்,கரு,உரி என மூன்றாகப் பாகுபடுத்துகிறார்.

## குறிஞ்சித் திணைக் கவிதைகளில் முதற்பொருள் கட்டமைப்பு

மனித ஒழுக்கத்திற்கு நிலமும் பொருளும் ஆதாரமாக அமைகின்றன. ஆதலால் தொல்காப்பியர் இவ்விரண்டையும் முதற்பொருள்களாகச் சுட்டுகிறார். கவிதைகளின் திணையை அறிய முதற்பொருள்கள் பயன்படுகின்றன. ”நிலமும் பருவப் பொழுதுகளும் இயற்கையும் இவற்றைப் பின்னணியாகக் கொண்ட மனித வாழ்வும் இயைபுபடப் புனையப் படுவதே திணை இலக்கியமாகும்” அகத்திணைப் பாடல்களின் பின்புலமாக முதற்பொருள்கள் விளங்குகின்றன (Tamizhannal, 1978).

முதற்பொருள்களின் ஒரு பகுதியாகிய நிலத்தினை நான்காக வகைப்படுத்துவர். காடும் காடு சார்ந்த இடத்தை முல்லை எனவும் மலையும் மலை சார்ந்த இடத்தைக் குறிஞ்சி எனவும் வயலும் வயல் சார்ந்த இடத்தை மருதமெனவும் மணலும் மணல் சார்ந்த இடத்தை நெய்தல் எனவும் பெயரிட்டு வழங்கினர். மேற்கூறிய நானிலங்களைத் தவிர ஐந்தாவது நிலம் ஒன்று காணப்படுகிறது. இயற்கை மாறுபாட்டால் பருவ மழை பெய்யாது வளம்குன்றிய காலத்தில் முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தம் இயல்பை இழந்து புதியதொரு தன்மையைப் பெறும். இத்தன்மையுடைய நிலத்தைத் தமிழர்கள் பாலை என்று வழங்கினர். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட குறுந்தொகை குறிஞ்சிதிணைக் கவிதைகளில் முதற்பொருளான நிலக்கூறு பல நிலைகளில் பயின்று வருவதை இனங்காண முடிகின்றன.

## குறிஞ்சி நிலக் கட்டமைப்பு

குறிஞ்சி என்பது தலைவனும் தலைவியும் காதல் கொள்ளும் களம். இக்களப் பின்புலத்தில் கவிதையை உருவாக்கும் புலவன் கூற்றை அடிப்படையாகக் கொள்கிறான். பின்னர் அக்களப் பின்புலத்தில் இயங்கும் பொருள்களைக் கவிதையின் பின்புலமாக மாற்றி கவிதையைக் கட்டமைக்கிறான். மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலப் பின்னணியைப் புலவர்கள் பல்வேறு நிலைகளில் காட்சிப்படுத்துகின்றனர் .அருவி வீழ்கின்ற மலையாக, தினைப் புனங்களாக, விலங்குகள் நடமாடும் இடமாக , மலர்கள் பூத்து குலுங்கும் இடமாக, தலைவனின் நாடாக மலைப்பகுதியைச் சித்தரிக்கின்றனர்.மேலும் சில இடங்களில் உவமை நிலையிலும் வருணனை நிலையிலும் மலை சார்ந்த நிலப் பின்புலத்தைக் கட்டமைத்துள்ளனர். அவ்வாறு குறிஞ்சி நிலப் பின்புலத்தைக் கட்டமைக்கும் போது அத்திணைப் பின்புலத்தில் இயங்கும் பொருள்களைக் காட்சியாக்கி நிலப் பின்புலம் காட்டப்பட்டுள்ளது. இதனை

“மால்வரை இழிதருந் தூவெள் ளருவி”

“சூர்மலை நாடன் கேண்மை”

“மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்

தருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்”

போன்ற கவிதையடிகள் வழியாக அறிந்து கொள்ளலாம் (Sanmugam pillai, 1985).

## குறிஞ்சித் திணைப் பொழுது கட்டமைப்பு

முதற்பொருளின் மற்றொரு பகுதியாகிய காலமும் முதற்பொருளாகவே கருதப்படுகிறது. மனித வாழ்வின் எல்லா நிகழ்வுகளுக்கும் நிலமும் காலமும் தேவைப்படுகின்றன. "பருவ காலங்கள் என்பன எல்லா நாட்டவர்க்கும் எல்லா மக்களுக்கும் பொதுவானவை. எல்லாத் திணைகளிலும் திணை வாழ்விலும் இயல்பாக இடம் பெறுவன. குறிப்பிட்ட நிலம் அந்நிலம் சார்ந்தோருக்கு அவர் தம் வாழ்கைக்கு ஏற்றதாக இருப்பதைப் போலன்றி காலம் குறிப்பிட்ட நிலம் சார்ந்தோருக்கென இல்லாமல் எல்லாக் காலங்களும் எல்லா நிலத்தவற்கும் பொதுவானவையாக இருப்பது உலகியல் வழக்கு" ஆனால் தொல்காப்பியர் இந்த உலகியல் வழக்கினின்று வேறுபட்டுக் காலங்களைக் குறிப்பிட்ட திணைகளுக்குக் கூறியிருப்பது காதலை முதன்மைப்படுத்துவதற்காகும் (Mathaiyan, 2009).

கூதிர்க்காலமும் முன்பனிக்காலமும் குறிஞ்சித் திணைக்குரிய பெரும் பொழுதுகளாகும். சிறு பொழுதாக யாமம் அமைகிறது. இதை,

"குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்"

என்ற நூற்பாவால் அறியலாம் (Sanmugam pillai, 1985).

குறுந்தொகை கவிதைகளில் குறிஞ்சித் திணைப் பொழுதுகள் கவிதையின் இயக்கத்திற்குப் பயன்படுவதைப் பல நிலைகளில் இனங்காண முடிகின்றன. பெரும்பொழுதைவிட சிறுபொழுதாகிய யாமமே அதிகமாக கவிதைகளில் புனையப்பட்டுள்ளது. கூதிர்க்காலத்தையும் முன்பனிக்காலத்தையும் வாடைக்காற்றோடு சேர்த்துப் புனைந்துள்ளனர். குறிஞ்சியின் பெரும்பொழுதுகள் பெரும்பாலும் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் வருத்தத்தைக் காட்டுவதற்காகப் பின்புலமாக்கியுள்ளனர். ஆனால் சிறுபொழுதாகிய யாமம் பெரும்பாலும் தலைவன் இரவுக்குறியில் தலைவியைச் சந்திக்க வருகின்ற வழியின் கொடுமையைக் காட்டுவதற்காகவும் சில இடங்களில் தலைவியின் பிரிவுத்துயரைச் சித்தரிப்பதற்கும் கட்டமைத்திருப்பதை அறிய முடிகிறது. இதனை,

"பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்"

"வடபுல வாடைக் கழிமழை

தென்புலம் படருந் தண்பனி நாளே"

"உறை சிறந்து ஊதை தூற்றும் கூதிர் யாமத்து"

என்னும் கவிதையடிகள் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன (Sanmugam pillai, 1985).

## குறிஞ்சித் திணைக் கவிதைகளில் கருப்பொருள் கட்டமைப்பு

தொல்காப்பியர் குறிப்பிடும் முதல், கரு, உரிப்பொருள்களில் முதல், கரு ஆகிய இரண்டும் இயற்கையோடு இயைந்ததாகும். குறிப்பாக இயற்கையைப் பயன்படுத்திக் கவிதையைப் படைக்கும் மரபு அகப் பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகிறது. முதற்பொருளான நிலத்தையும் பொழுதையும் இயங்கச் செய்வது அந்நிலங்களில் உள்ள கருப்பொருள்கள் ஆகும். கருப்பொருள் என்பது அவ்வவ்நிலத்திற்குரிய உற்பத்திப் பொருள்" எனப் பேரகராதி விளக்கமளிக்கிறது (Murugesa Muthaliyar, 1886). "கருப்பொருள் என்பது இயற்கைப் பொருள்கள் அல்லது நிலம் சார்ந்தவை" என்று பொருள்படும் (Yaroslav vachak, 2015). பறவைகளும் விலங்குகளும் தாவரங்களும் அடங்கிய இயற்கை கவிதைக்கு மிக இன்றியமையாத கூறாக அமைந்து கவிதையின் பொருளை வெளிப்படுத்துகிறது.

குறுந்தொகை குறிஞ்சித் திணைக் கவிதைகளில் தெய்வம், மக்கள்,உணவு, விலங்குகள், பறவைகள், மரங்கள், பூக்கள், ஊர்,நீர், தொழில், பறை, பண் ஆகிய கருப் பொருள்கள் புனையப்பட்டுள்ளன. தெய்வம் என்னும் கருப்பொருள் கூறு சில கவிதைகளில் மலைக்குரிய தெய்வம் என்ற நிலையில் புனைந்துள்ளனர். வெற்பன், சிலம்பன்,கொடிச்சி, போன்ற தலைமக்களும் குறவன், கானவன் ஆகிய தொழில் சார்ந்த மக்களும் கவிதைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன .மலைநாட்டுச்

சிறப்போடு தலைமக்களும் வேட்டைக் கருவிகளோடு இணைத்து தொழில் சார்ந்த மக்களும் புனையப்பட்டுள்ளன. விலங்குகளை அவற்றின் நெடுங்கை, கோடு,கரிய நிறம், சிவந்த முகம், சிவந்த கண்கள், கறுத்தவிரல்கள், கொல்லும் தன்மை என உருவத்தோற்றத்தையும் அவற்றின் செயல்களையும் எடுத்துக்காட்டி வருணித்துள்ளனர். பறவைகளின் அழகு அவற்றின் சிறகு, குரல், கூரிய நகங்கள், சிவந்த கால்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டியும் கட்டமைத்துள்ளனர். மரங்களின் அடிப்பகுதி, கொம்பு ஆகியவற்றை முன்னிறுத்தியும் பூக்களின் நிறம், மணம், காம்புப் பகுதி ஆகியவற்றைக் காட்டியும் புனைந்துள்ளனர். இவ்கருப்பொருள்கள் தலைவனின் மலைநாட்டு வளத்தைக் காட்டுவதற்கும் தலைவியின் மேனி அழகை வருணிப்பதற்கும் தலைவன் இரவில் தலைவியைச் சந்திக்க வரும் வழியின் கொடுமையைக் காட்டுவதற்கும் புனையப்பட்டுள்ளதை உய்த்துணர முடிகிறது. இதனை,

“நெடுங்கை வனமான் கடும்பகை உழந்த

“அருவி ஆர்ந்த தண்நறுங் காந்தள்”

போன்ற கவிதையடிகளால் உணர்ந்து கொள்ளலாம் (Sanmugam pillai, 1985).

## குறிஞ்சித் திணைக் கவிதைகளில் உரிப்பொருள் கட்டமைப்பு

முதல், கரு, உரி என்னும் முப்பொருள்களில் உரிப்பொருளே மிக இன்றியமையாதது. கவிதையின் உயிர்ப்பொருளாக விளங்குவதும் இதுவேயாகும்.”உரிப்பொருள் என்பது அகத்திணைப் பாடலில் உயிர் போன்ற மையக்கருத்து அல்லது அடிக்கருத்து எனலாம். உரிப்பொருளின்றிப் பாடலே அமையாது. ஏனைய முதலும் கருவும் இவ்வுரிப்பொருளுக்கு வாய்த்த பின்புலமேயாகும்” என்று குறிப்பிடுகிறார் (Tamizhannal, 2012). உரிப்பொருள் என்பதைக் கவிதைக்கு உரிதானப் பொருள் அல்லது அவரவர்க்குப் பொருத்தமான உணர்வுகள் என யரோஸ்லவ் வாச்சக் மொழிகிறார் (Sanmugam pillai, 2012). மக்கட்கு உரிய பொருளான உரிப்பொருள் மக்கள் வாழ்க்கையை ஒட்டியே இருக்கும். ‘புணர்தல்‘ என்பதைக் குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருளாகத் தொல்காப்பியர் சுட்டுகிறார். இவ்வுரிப்பொருளைக் குறுந்தொகை கவிதைகளில் நான்கு நிலைகளில் கட்டமைத்திருப்பதை இனங்கண்டு கொள்ள முடிகிறது. சில கவிதைகளில் முதற்பொருளைக் கொண்டும் சில கவிதைகளில் கருப்பொருளைக் கொண்டும் சில கவிதைகளில் முதற்பொருளும் கருப்பொருளும் இணைந்தும் சில கவிதைகளில் முதல் கருப்பொருள்களின் துணையின்றி கருத்து நிலையிலும் கவிதையாக்கம் நிகழ்ந்துள்ளது. சான்றாக ‘தலைமகன் இடைந்தலைப் பாட்டின் கண் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது‘ என்னும் சூழலின் அடிப்படையில் சிறைக்குடி ஆந்தையார் புனைந்த கவிதையைச் சுட்டலாம்.

“கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை

நாறுஇதழ்க்குவளையொடு இடைப்பட விரைஇ

ஐதுதொடை மாண்ட கோதை போல

நறிய நல்லோள் மேனி

முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே”

என்ற கவிதையில் முதற்பொருள் சார்ந்த கூறுகள் கவிதைப் புனைவிற்குப் பயன்படவிலை.கருப்பொருள்களுள் மலர் வகையைச் சார்ந்த காந்தள் மலர் இடம் பெற்றுள்ளது (Sanmugam pillai, 1994). இம்மலர் தலைவியின் அழகை வெளிபடுத்தும் விதத்திலே இடம்பெற்றுள்ளது. சிறைக்குடி ஆந்தையார் பிற திணைகளுக்குரிய முல்லை, குவளை ஆகிய மலர்களையும் கவிதைப் புனனவிற்குப் பயன்படுத்தியுள்ளார். இதைக் கருப்பொருள் மயக்கமாகக் கொள்ளலாம். காந்தள், முல்லை, குவளை ஆகிய மலர்களால் கட்டப்பட்ட மாலையைப் போல தலைவியின் மேனி தழுவுவதற்கு இனியது எனத் தலைவன் எண்ணுகிறான். ஆக புணர்தல் என்னும் உரிப்பொருளோடு

தொடர்புடைய இடந்தலைப்பாடு என்னும் சூழலை அடிப்படையாகக் கொண்டு கவிதை புனைய கருப்பொருள் கூறுகள் மட்டுமே பயன்பட்டுள்ளன.

## முடிவுரை

குறுந்தொகையில் உள்ள குறிஞ்சித்திணைக் கவிதைகளின் கட்டமைப்பு முறைகளை முதல்,கரு, உரி என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆராயப்பட்டன. குறிஞ்சித்திணைப் பின்புலத்தில் இயங்கும் பொருள்களைக் காட்சியாக்கி குறிஞ்சி நிலப்பின்புலம் கட்டமைக்கப்பட்டுள்ளது. தலைவனின் நாட்டுவளத்தையும் குண இயல்புகளையும் ஊரையும், தலைவியின் ஊரையும் இரவுக் குறியில் தலைவன் வரும் வழியின் ஏதத்தையும் புனையவே இந்நிலப்பின்புலங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சில பாடல்களில் வருணனையாகவும் உவமையாகவும் நிலப்பின்புலங்கள் காட்சியளிக்கின்றன. பொழுது வருணனைகள் பெரும்பான்மையாகத் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் வருத்தத்தை மிகுதிப்படுத்திக் காட்டுவதற்காகவே புனையப்பட்டுள்ளன. குறிஞ்சித் திணைக் கவிதைகளில் விலங்கு, பறவை, மரம், போன்ற கருப்பொருள் கூறுகளே அதிகமாக புனைவு கொண்டுள்ளன.மற்ற திணைகளுக்குரிய கருப்பொருள்களும் குறிஞ்சித் திணையில் மயங்கி வந்துள்ளன. ஆனால் அந்தந்தத் திணை சார்ந்த கருப்பொருள்கள் அவ்வவ்நிலப்பின்னணியோடு அதிகமாக நெருக்கம் கொள்வதையும் காண முடிகிறது .தலைவன், தலைவியின் ஊர் வளத்தைச் சுட்டுவதற்கும் தலைவியின் அழகைப் புனைவதற்கும் தலைவியின் வருத்தத்தைக் காட்டுவதற்கும் குறிப்பாய் பொருளை உணர்த்தவும் கருப்பொருள்கள் புனையப்பட்டிருப்பதை அறிய முடிகின்றன.அக இலக்கியங்கள் உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இயங்கினும் முதல், கரு என்னும் பின்புலக்கூறுகள் கவிதைக் கட்டமைப்பிற்குப் பெரிதும் உதவுவதை இனங்காண முடிகிறது. குறிஞ்சித் திணைக் கவிதைகளை ஆராயும் போது பெரும்பான்மையான கவிதைகளில் இப்பின்புலக்கூறுகள் கவிதைகளின் மையத்துடன் நெருக்கம் கொள்கின்றன. சில கவிதைகளில் இப்பின்புலக்கூறுகள் பயன்படாததையும் உணர முடிகிறது. கவிதைகளில் வெளிப்படையாகக் கருத்துக்களை முன்வைக்கும் போது புலவர்கள் இப்பின்புலக்கூறுகளைப் பயன்படுத்தவில்லை. ஆனால் கருத்தைக் குறிப்பாக உணர்த்த நினைக்கும் இடங்களில் பின்புலக் கூறுகளின் துணையுடன் கவிதைகளைக் கட்டமைத்திருப்பதை அறிய முடிகின்றது.

## References


Mathaiyan, P. (2009) Agaththinaik Kotpadum Sanga Agakkavithai Marapum, Paavai Pathippagam, Chennai, India.

Murugesa Muthaliyar, (1866) Piragarathi, Athikalanithi Press, Chennai, India.

Sanmugam pillai, M. (1985) Kurunthogai, Tamil University, thanjavur, India.

Tamizhannal, (2012) Sanga Ilakkiya Oppidu Ilakkiya Kolkaikal, Meenashi Puthaga Nilaiyam, Madurai, India.

Tamizhannal, (1978) Tholkappiyam, Meenashi Puthaga Nilaiyam, Madurai, India.

Yaroslav Vachak, (2015) Sanga Ilakkiyathil Eyarikai Kuriyeedu Inthinai Malarkalum Marapukalum, Adaiyalam Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License